# ஆசிரியர் - அதிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிசார் தாக்குதல்




இசுருபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆசிரியர் அதிபர் சங்கத்தினால் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர் கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பெலவத்தை, பாலம்துன (மூன்று பாலம்) சந்தியை நோக்கிப் பேரணியாகச் சென்றபோதே பொலிஸாரினால் குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொரளை - கொட்டாவ வீதி (174 பஸ் பாதை) போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ, க)


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை 24.10.2023 கதிர் 98



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூஆடை

PooAadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## சாணக்கியன் எம்.பிக்கு எதிராக சுமண ரத்ன தேரர் முறைப்பாடு!



மட்டக்களப்பு காணி விவகாரம் தொடர்பாக அம்பிட்டிய சுமண ரத்ன தேரரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் தலையீட்டினால் மட்டக்களப்பு மகாவலி கிராமங்களில் இருந்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டமை, பிக்குகளுக்குப் 2

## சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுப் பணிப்பாளருடன் பிரதமர் தினேஷ் குணவர்தன சந்தித்துக் கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனை பிரதமர் தினேஷ் குணவர்தன கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு முறையின் முன்னேற்றம், அரசாங்கத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான இடைக்கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களுக்குத் தேவையான உதவிகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சிக்கலான காலகட்டத்தினைக் கடப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிவாரணத் திட்டங்கள் குறித்தும் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்குப் பிரதமர் எடுத்துரைதுள்ளார்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் பி.கே.ஜி ஹர்ச்சந்திர ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். (04)

## ரணிலின் இரட்டை வேடம் கலைந்தது! கயந்த கருணாதிலக்க எம்.பி தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இரட்டை வேடம் தற்போது நாட்டு மக்களுக்கு தெளிவாகப் புரிந்துவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்சர்களின் ஆசிர்வாதத்தோடு ஆட்சிக்கு வந்த தலைவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டத் தவணையை உரிய நேரத்திற்குப் பெற முடியாமல் தோல்வியடைந்துள்ளனர்.

மக்கள் ஆணையற்ற அரசாங்கத்தின் இறுதி நாடகமே தற்போது அரங்கேற்றப்படுகிறது.

பண வீக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் 2

## இலங்கைக்கு வருவோருக்கு இலவச விசா அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

ஏழு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசாவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதனடிப்படையில் இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா 2

## மட்டக்களப்பில் போலி முகவர்களை நம்பி சுமார் எட்டு கோடி ரூபாவை இழந்த மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 188 பேர் வெளிநாட்டு மோகத்தால் பணத்தை இழந்துள்ளனர் என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சுமார் 8 கோடி ரூபாவைப் போலி முகவர்களின் ஆசைகளை நம்பித் தாம் இழந்துள்ளனர் என்று தெரிவித்த அவர்கள், தற்போது நிர்க்கதிக்குள்ளான தம்மைக் காப்பாற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரினர்.

நேற்று மாலை களுவாஞ்சிக்குடிபி பகுதியில் அமைந்துள்ள சாணக்கியன் எம்.பியின் அலுவலகத்துக்கு வந்த பாதிக்கப்பட்ட மக்கள், பல மணித்தியாலங்கள் எம்.பியுடன் உரையாடி தத்தமது பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் சாணக்கியன் எம்.பி. தெரிவிக்கையில்,

"வெளிநாட்டில் வேலைவாய்ப்பு எனக் கூறி 188 பேரிடம் 8 கோடி ரூபாவுக்கு அதிகமான பணம், அரச உத்தியோகத்தில் உள்ள சிலரால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு உடந்தையாக பாடசாலை மாணவன் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று அறிகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் தற்போது 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டும் கலந்துரையாடினேன். 2

## யாழ் - வவுனியாவைச் சேர்ந்த இருவர் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கம்

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதாகத் தெரிவித்து கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்டிருந்த இருவரை அதிலிருந்து நீக்கி பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவினால் இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த அந்தோனி எமில் லக்ஷ்மிகாந்தன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகேசு ஸ்ரீ சண்முகராஜா ஆகிய இருவரும் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இருவரும் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தடுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய தொழிற்தகைமை திறன் விருத்தி பயிற்சி செயலமர்வு தம்பலகாமத்தில்

(ஹஸ்பர்)

தொழில்வாய்ப்பினை எதிர்பார்ப்பவர்களுக்கான திறன் விருத்தி தொடர்பிலான செயலமர்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த நிகழ்வினை மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் திறன் விருத்திப் பயிற்சிகள் தொடர்பாகவும் அதற்காக சீட் முறை மூலமாக தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் ( ஏஜேகு) பெறுதல் தொடர்பான வழிகாட்டலும் இடம்பெற்றன.

பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நைட்டா நிறுவன உத்தியோகத்தர், மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய மூவர் சிக்கினர்

ரம்புக்கனை, திஸ்மல்பொல பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரம்பெத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவரைக் கைது செய்யச் சென்ற போது, சந்தேக நபர்கள் குறித்த அதிகாரிகளைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த அதிகாரிகள் இருவரும் ரம்புக்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பெண் ஒருவர் உட்பட மூவர் ரம்புக்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## பூநகரி பிரதேச அனர்த்த முன்னாயத்த கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பருவ மழையினால் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலாளர் ரி.அகிலன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பருவ மழையின்போது ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக, குறித்த துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், அனர்த்தங்களின் போது மக்களை பாதுகாப்பதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், பூநகரி பிரதேச சபை செயலாளர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி, கல்வித் திணைக்கள அதிகாரிகள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள், பூநகரி பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## தென் மாகாண பாடசாலைகள் மீண்டும் இன்றையதினம் ஆரம்பம்

தென் மாகாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக பல கல்வி வலயங்களில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று (செவ்வாய்கிழமை) முதல் வழமை போன்று திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி தெனியாய கல்வி வலயத்தில் மூடப்பட்ட 77 பாடசாலைகளும், அக்குரஸ்ஸ கல்வி வலயத்தில் மூடப்பட்ட 77 பாடசாலைகளும் இன்று முதல் திறக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விச் செயலாளர் ரஞ்சித் யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

## 200 மில்லியன் ஜென் வழங்கும் ஜப்பான்

இலங்கையின் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக ஜப்பானிய அரசாங்கம் தனது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ஜென்னை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

சுமார் 435 மில்லியன் ரூபாய் மானியம், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவிற்கு என வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் போலி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்கள் என்னை இதற்கான உரிய நீதியைப் பெற்றுத் தரும்படி எனது அலுவலகத்தில் சந்தித்தார்கள்.

தற்போது இவ்வாறான மோசடிகள் அதிகளவாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான ஏமாற்றுக் காரர்களிடமிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்." - என்றார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் 188 பேரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். இதில் 146 பேரை டுபாய் நாட்டுக்கும், 20 பேரை டென்மார்க் நாட்டுக்கும், 22 பேரைத் தாய்லாந்து நாட்டுக்கும் அனுப்புவதாகக் கூறி பாரிய பண மோசடியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் .

டுபாய் நாட்டுக்குச் செல்பவர்களிடம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், டென்மார் நாட்டுக்குச் செல்பவர்களிடம் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தாய்லாந்து நாட்டுக்குச் செல்பவர்களிடம் 4 முதல் 5 இலட்சம் வரை ரூபா வரையும் அவர்கள் பணம் வாங்கியுள்ளனர்.

மொத்தமாக 188 பேரிடம் அண்ணளவாக 8 கோடி ரூபாவை அவர்கள் மோசடி செய்துள்ளனர். (அ)

## ரணிலின் இரட்டை வேடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகளை வெளியிட்டாலும், உண்மையிலேயே பணவீக்கம் குறைந்துள்ளதா, அல்லது அதிகரித்துள்ளதா? என்பதை சந்தைக்குச் சென்று பார்த்தால் நடைமுறை ரீதியாகப் புரிந்து கொள்ள முடியும்.

அரசியலமைப்பின் பிரகாரம் பல்வேறு தேர்தல்களை நடத்த வேண்டியுள்ள தருணத்திலும் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும், என அரசாங்கம் கூறிவருகிறது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாக கட்சிச் சம்மேளனத்தில் கூறிய ஜனாதிபதியே தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கான ஆணைக்குழுவை நியமித்து தனது இரட்டை வேடத்தை நாட்டுக்குக் காண்பித்துள்ளார்.

மக்களின் உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் மீற வேண்டாம், என அரசாங்கத்தை நாம் கேட்கிறோம்.

தேசியத் தேர்தல் ஒன்றிற்குச் சென்று மக்கள் ஆணையைக் கோருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு வருவோருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு விசா இன்றி நாட்டிற்குப் பிரவேசிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் வருடம் மார்ச் 31 ஆம் திகதி வரை இந்தச் சலுகை வழங்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## சாணக்கியன் எம்.பிக்கு எதிராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் துன்புறுத்தல் மற்றும் புத்தர் சிலையை சாணக்கியன் அகற்றியமை, பாதுகாப்புப் படையினரைத் தடுத்தமை உள்ளிட்ட விவகாரங்களைக் குறிப்பிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பிட்டிய சுமண ரத்ன தேரருடன் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் உள்ளிட்ட குழுவினர் இதன்போது உடனிருந்தனர். (க)





விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வித்தியாரம்பம்!




இன்றைய விஜயதசமி நாளில் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ் வரக் குருக்கள் தலைமையில் வித்தியாரம்ப நிகழ்வு இடம் பெற்றது. (படம்- வி.ரி. சகாதேவராஜா)



## சிறிதரன் எம்.பி. அலுவலகத்தில் இன்று ஏடு தொடக்கும் நிகழ்வு

விஜயதசமியாகிய இன்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கிளிநொச்சி அறிவகம் அலுவலகத்தில் கற்றல் செயற்பாடுகளுக்கான ஆரம்ப ஏடு தொடக்கும் நிகழ்வு நடைபெற்றது. (02)

## யாழ். பல்கலையில் விஜயதசமி நிகழ்வுகள்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் விஜயதசமியை முன்னிட்டு ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

இன்று காலை யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 8 மணியளவில் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு, வாழை வெட்டு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து 10 மணியளவில் ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் ஆரம்பமாகி நடைபெற்றன.

## எதிர்காலத்தை வெல்லப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் அறிவின் மீது முதலிட வேண்டும்

(நூருல் ஹுதா உமர்)

இயந்திரங்கள் நாம் கொடுக்கும் தகவல்களை வைத்துக்கொண்டு வேகமாக இயங்குகின்றன. ஆனால், குழந்தைகளோ நாளாந்த நடைமுறைகளின் மூலம் அறிவினைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றார்கள். அதனால் உங்கள் குழந்தைகளின் மீது நீங்கள் முதலீடு செய்யுங்கள் என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் அட்டாளைச்சேனையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார்




மேலும் அவர் பேசுகையில், குழந்தைகள் மீது முதலீடு செய்வதென்றால் அவர்களுக்கு வங்கியில் பணம் போட்டு வைப்பதோ, அவர்களுக்கு சொத்து சேர்த்து வைப்பதோ கிடையாது. அவர்கள் அறிவினை பெற்றுக்கொள்ள கூடிய விதத்தில் பெற்றோர்கள் செலவுகள் செய்திடல் வேண்டும். உதாரணமாக எல்லாப் பிள்ளைகளுக்கும் சித்திரம் வரைவதனைக் கட்டாயமாக்கி அதன்மீது செலவிடுவதனால் அப்பிள்ளை நீலத்தையும் மஞ்சளையும் சேர்த்தால் என்ன வர்ணம் வரும் என்பதை தேடிக்கற்றுக் கொள்ளும். ஆனால், நமது பிள்ளைகள் சுவரில் கீறிவிட்டது என்றால் நாம் எரிந்து விழுவோம். மாறாக அவர்களுக்கு முறையாக சித்திரம் வரையக்கூடிய பொருட்களை வாங்கிக் கொடுக்க மறந்து விடுகின்றோம். இவ்வாறு தான் கல்வி, விளையாட்டு, குர்ஆன் ஓதுதல், நடனமாடுதல் என பிள்ளைகளுக்கு தேவையானவற்றில் நாம் முதலீடு செய்ய வேண்டும்

நம்மால் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு கூட எதிர்காலத்தில் அவர்கள் மிகவும் இலகுவான முறையில் தீர்வினைப் பெற்றுக்கொள்வார்கள். அதற்காக அவர்கள் மீது முதலீடு செய்யுங்கள். நீங்கள் இழந்ததை விடவும் பன்மடங்கை அவர்கள் சம்பாதிப்பார்கள் என தெரிவித்தார்.

## கலாசாலை மரியன்னை ஆலயத்தில் 27 ஆம் திகதி பெருநாள் திருப்பலி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை ஆலயத்தின் பெருநாள் திருப்பலி வரும் 27 ஆம் திகதி வெள்ளி காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ் மறைக்கோட்ட முதல்வரும் யாழ் பேராலய பங்குத் தந்தையுமாகிய அருட்பணி ஜே.ஜே.மௌலீஷ் அடிகள் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

கோப்பாய் பங்குத்தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகள், யாழ் மறைக்கல்வி நடுவு நிலையை இயக்குனர் டபிள்யூ.எக்ஸ்.ஜேம்ஸ் அடிகள் ஆகியோர் பெருநாள் திருப்பலியில் கலந்து ஆசி வழங்கவுள்ளனர்.



# இஸ்ரேல் - ஹமாஸ் தொடரும் மோதலில் தனது நிலைப்பாட்டை மாற்றியது சீனா

18 ஆவது நாளாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையேயான மோதல் தொடர்ந்து வருகிறது. பணயக் கைதிகளை மீட்கும் முயற்சியும் நடந்து வருகிறது. இந்த விடயத்தில் ஏனைய பல நாடுகளும் இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கிய நிலையில் சீனா இதுவரை எந்தவொரு வெளிப்படையான அறிவிப்பையும் வெளியிட்டிருக்கவில்லை.

பாலஸ்தீன விவகாரத்தில் ஒரு விரிவான, நீண்டகாலத் தீர்வை விரைந்து காண வேண்டும் என்றும் இதற்காக எகிப்து மற்றும் பிற அரபு நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தயார் என்றும் கடந்த வாரம் சீன அதிபர் ஜின்பிங் கூறினார். உடனடிப் போர் நிறுத்தம் வேண்டும் என்றும் கூறினார்.


இந்த நிலையில், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தொலைபேசி வழியே இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் எலி கோஹெனைத் தொடர்பு கொண்டு நேற்று உரையாடியுள்ளார்.

அப்போது அவர், ஒவ்வொரு நாட்டுக்கும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உரிமை உள்ளது, என முதன்முறையாக சீனா ஒப்பு கொண்டுள்ளது. ஹமாஸ் அமைப்பை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து உள்ளன.

இதுவரை ஹமாஸ் அமைப்பு மீது கண்டனம் எதுவும் தெரிவிக்காமல் சீனா ஒதுங்கியே இருந்தது. இதனால், இஸ்ரேலுக்கு உறுதுணையாக இருக்கும்படி சீனாவை, அமெரிக்கா கேட்டுக் கொண்டது. இஸ்ரேலும் வெளிப்படையாக சீனாவுக்குக் கண்டனம் தெரிவித்து இருந்தது. இந்த நிலையில், தொடர் மோதலால் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்படுவது ஆழ்ந்த வருத்தம் அளிக்கிறது என சீன வெளியுறவு அமைச்சர் வாங் கூறியுள்ளார்.

இந்த வாரம் வாங், அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ள சூழலில், இஸ்ரேல் விவகாரத்தில் தன்னுடைய நிலைப்பாட்டை சீனா மாற்றியுள்ளது.

சீன அதிபர் ஜின்பிங் அடுத்த மாதம் அமெரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அவருடைய இந்தப் பயணத்தில், அமெரிக்க அதிபர் ஜோ பைடனைச் சந்தித்துப் பேசவிருக்கிறார். இஸ்ரேல் போர் நடந்து வரும் சூழலில், இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. (04)





# பிரான்ஸ் அதிபர் மக்ரோன் இஸ்ரேலுக்குப் பயணம்

இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் தனது ஆதரவை தெரிவிக்கும் வகையில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் இஸ்ரேல் தலைநகருக்குச் சென்றுள்ளார்.

ஏற்கெனவே கடந்த வாரம் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்துப் பேசினர்.

இந்த நிலையில், இஸ்ரேலுக்குச் சென்றுள்ள பிரான்ஸ் அதிபரும் அந்நாட்டு பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து ஆதரவு அளித்துள்ளார்.

முன்னதாக அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் இணைந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் படையினர் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் நாட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய நிலையில், ஹமாஸ் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஸா நகரத்தின் மீது இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மூன்றாவது வாரமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். (04)

# மேலும் 2 பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவிப்பு

ஹமாஸ் அமைப்பு தனது பிடியில் இருந்த அமெரிக்கர்கள் இருவரை கடந்த வாரம் விடுவித்திருந்த நிலையில், நேற்று மேலும் இரண்டு பெண்களை விடுவித்துள்ளது.



பாலஸ்தீனத்தின் காஸா முனைப் பகுதியில் இருந்து ஹமாஸ் ஆயுதப் படையினர் கடந்த 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலியர் 1,400 பேர் உயிரிழந்ததோடு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட பலரை அவர்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர்.

கட்டார் அரசின் பேச்சுவார்த்தைக்குப் பின்னர், பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட ஜூடித் டாய் ரானன் மற்றும் அவரது மகள் நாட்டாலி ரானன் இருவரும் 14 நாள்களுக்கு பிறகு கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் இஸ்ரேல் திரும்பியிருந்தனர். அவர்களது உடல் நிலை குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், விடுவிக்கப்பட்ட இரண்டு பேரிடமும் தொலைபேசி வழியாகப் பேசி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

கட்டார் மற்றும் எகிப்து ஆகிய இரு நாடுகளும், பிடித்துச் செல்லப்பட்ட பொது மக்களை விடுவிக்கக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த நடவடிக்கையை, ஹமாஸ் எடுத்து வருவதாகவும் இன்னும் பலர் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் நம்பப்படுகிறது.

தற்போது காஸாவின் எல்லையில் விடுவிக்கப்பட்ட இருவரையும் இஸ்ரேல் இராணுவம் மீட்டு மத்திய இஸ்ரேல் இராணுவத் தளத்திற்கு கொண்டு சென்றனர்.

இஸ்ரேலில் விடுமுறையைக் கழிப்பதற்காக வந்திருந்த தாயும் மகளும் ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று இஸ்ரேலின் எல்லையில், கிபூஸ் பகுதியில் வைத்து ஹமாஸ் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டனர். கட்டார் அரசின் சமரச முயற்சியின் பலனாக, மனிதாபிமான அடிப்படையில் இந்த அமெரிக்கப் பெண்கள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலியர்கள், இரட்டை குடியுரிமை உள்ளவர்கள், வெளிநாட்டினர் என 203 பேர் ஹமாஸ் பிடியில் இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது. இதில் கிட்டதட்ட 20 குழந்தைகளும், 10 முதல் 20 பேர்வரை 60 வயதிற்கு மேற்பட்டவர்களும் இருக்கலாம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (04)

# ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவு வழங்குகிறது ஈரான் மீது அமெரிக்கா நேரடிக் குற்றச்சாட்டு

ஹமாஸ் அமைப்புக்கு பல ஆண்டுகளாக ஈரான் ஆதரவு அளித்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் செயல்திட்ட தொடர்புகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசும்போது,

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஈரான் பல ஆண்டுகளாக ஆதரவளித்து வருகிறது. இரு தசாப்தங்களாக இந்த ஆதரவு உள்ளது. ஈரான் இன்றி ஹமாஸ் அமைப்பினரால் இயங்கவோ அல்லது தொடர்ந்து செயல்படவோ முடியாது.

ஆனால், கடந்த 7 ஆம் திகதி நடந்த தாக்குதல் சம்பவத்தில் அவர்கள் பங்கு கொண்டுள்ளனர் என்றோ அல்லது அதற்கு உத்தரவிட்டனர் என்றோ கூறுவதற்கு, ஒரு குறிப்பிட்ட உளவுத் தகவலை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று நான் கூற வரவில்லை. ஆனால், உலகில் தீய நபர்களுடன் சேர்ந்து கெடுதலான விடயங்களை ஈரான் செய்து வருகிறது என்ற உண்மையில் இருந்து ஒருவரும் விலகிச் சென்று விட முடியாது. அதில் யாரும் சந்தேகம் கொள்ள முடியாது!, என்று கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்கி வருவதற்கு எதிராக சில தினங்களுக்கு முன்பு, ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்தது. அது நிலைமையை இன்னும் சிக்கலுக்கு உள்ளாக்கும் என்று ஈரானின் உயர்மட்ட ராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் மொகமட் பாகேரி கூறிய தகவலை அந்நாட்டின் ஐ.ஆர்.என்.ஏ. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

எனினும், பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிடத் தேவையான எல்லா விடயங்களும் இஸ்ரேலிடம் உள்ளது என்பதை உறுதி செய்யவேண்டியது அமெரிக்காவின் உச்சபட்ச முன்னுரிமைக்கான விடயம் என்று கிர்பி தெரிவித்திருக்கிறார். (04)



# கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனைப் பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிமனையின் உத்தியோகபூர்வ இணையத் தளம் நேற்று திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட் டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு குறித்த இணையதளத்தினை வடிவமைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வினை ஒருங்கிணைப்பு செய்திருந்தது.

சுகாதாரத் தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜீப்பினால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் இணையத் தளத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பணி மனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# திருகோணமலைக் குடும்பமொன்றின் மூன்று மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு சக்கர நாற்காலி வழங்கி வைப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் சமூக சேவைகள் பிரிவின் ஏற்பாட்டில் வெருகல் பிரதேச செயலக பிரிவின் பூமரத்தடி சேனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் வறிய குடும்பமொன்றில் வாழும் மூன்று மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு சக்கர நாற்காலி நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

இவர்கள் இன்னொருவரின் உதவியின்றி நடக்க முடியாத நிலையில் உள்ளனர். நாகரட்ணம் கபில்ராஜ், நாகரட்ணம் ஆனந்தராஜ், நாகரட்ணம் பிலோஜன் என்பவர்களுக்கே சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது. இவர்களுக்கான உதவியை திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன் உதவியுடன் இன்று பிறந்த நாளைக் கொண்டாடும் மாணிக்கம் ரவி சங்கர் என்பவர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் வாணி விழா



சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் வாணி விழா நேற்றுத் திங்கட்கிழமை பணிமனையின் கணக்காளர் சீ.திருப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்கொண்டிருந்தார்.

(படம்- வி.ரி.சகாதேவராஜா)

# கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வாணி விழா



கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வாணி விழா அதிபர் திருமதி. விஜயசாந்தி நந்தபாலா தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆன்மீக அதிதியான மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மாதவானந்தா ஜ மகராஜ் நிகழ்வில் அருளுரை வழங்கினார்.

(படம்- வி.ரி.சகாதேவராஜா)



# முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் சட்டவிரோத மீன் பிடி 10 இலட்சம் பெறுமதியான வலைகளும் மீன்களும் சிக்கின



முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்டவர்களின் ரூபா பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட வலைகளும், 40,000 ரூபா பெறுமதியான மீன்களும் கைப்பற்றப்பட்டன.

தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு விரிவாக்க உத்தியோகத்தர் தலைமையிலான உத்தியோகத்தர்கள் நேற்றிரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், அவர்கள் தப்பியோடிய நிலையில் அவர்களின் வலைகள் மற்றும் மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளைத் தொடர்ந்து கைப்பற்றப்பட்டவை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு விரிவாக்க உத்தியோகத்தர் கு. சங்கீதன்தெரிவித்தார். (02)

## வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கும் வாகன இறக்குமதி உரிமம் வழங்கத் திட்டம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமம் வழங்கும் வேலைத் திட்டம் முழு வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 318 மின்சார வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக 38 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுள்ளதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மோசடிகள் இடம்பெற்றிருந்தால் விசாரணை நடத்துவதற்கு பூரண ஆதரவு வழங்கப்படும் எனவும் குறுகிய அரசியல் நோக்கங்களினால் இந்த நடவடிக்கையை மீளப்பெற முடியாது எனவும் இது தொடர்பான அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்குக் கட்டணச் சலுகையுடன் வழங்கப்பட்ட 119 உரிமங்களை முறைகேடாகப் பயன்படுத்தி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் வழிகள் மற்றும் வழிமுறைகள் குழுவில் அண்மையில் தெரிய வந்துள்ளது. குறித்த வாகனங்களில் 75 வீதம் ஒரு நிறுவனத்தினால் இந்த நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து ஆராய்ந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார். (அ)

## கொழும்பு வீடொன்றில் கசிப்பு காய்ச்சிய 2 சீனர்கள் கைது

கொழும்பு வெலிக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றில் கசிப்புக் காய்ச்சும் தொழிற்சாலையை நடத்தி வந்த சீனப் பிரஜைகள் இருவர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தொழிற்சாலைகளில் பணியாற்றும் சீனாவைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கே தாம் கசிப்பினைத் தயாரித்ததாக மேற்படி சீனப் பிரஜைகள் இருவரும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சீனர்கள் இந்தக் கசிப்பினை விரும்பி அருந்துகின்றனர் என பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதுடன், கைதாகிய சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து 250 லீற்றர் கோடா மற்றும் ஒரு லீற்றர் கசிப்பு என்பன பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-11)

## சிறீதரன் எம்.பியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலயத்திற்கு குடிநீர் வசதி



கிளிநொச்சி, ஒக். 24

அடிப்படை உட்கட்டுமான வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் கிளிநொச்சி மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர்க் கிணறும் அதனுடன் இணைந்த குடிநீர் வழங்கல் கட்டமைப்பும் நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மாணவர்களின் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்த்தேவையை நிவர்த்திசெய்யும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கோரிக்கைக்கு அமைவாக, நியூசிலாந்தில் வசிக்கும் அரியதாஸ் செல்வதாஸ் எனும் நன்கொடையாளரின் நிதிப்பங்களிப்பில், அவரது தாயாரான அமரர்.மேரிரெஜினா அரியதாஸ் ஞாபகார்த்தமாக இக்குடிநீர்க்கிணறு அமைக்கப்பட்டு இன்றையதினம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம், பாடசாலை அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, ஒலிபெருக்கி வசதியையும், சுற்று வேலி அமைக்கும் பணிகளையும் காலக்கிரமத்தில் மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருக்கிறார். (02)

## மின் கட்டணம் அதிகரித்தாலும் இவற்றின் விலை அதிகரிக்காதாம்



மின் கட்டணம் உயர்த்தப்பட்டாலும், பாடசாலை பாடசாலை மாணவர்களின் கற்றல் தேவைகளைக் கருத்திற்கொண்டு போட்டோ கொப்பி - பிரின்ட் அவுட், லெமினேட்டிங் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என தகவல் தொடர்பு நிலைய (கொம்யுனிகேஷன்) உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும், கடதாசி, டோனர் உள்ளிட்ட பொருட்களின் விலையை அரசு உயர்த்தினால் இவற்றின் விலையில் மாற்றம் செய்ய வேண்டி வரும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெ-12)

# ஆடை வகைகள், ஊதுபத்தி, மெழுகுவர்த்தி ஆகியவற்றின் விலை 5 வீதம் அதிகரிக்கலாம்

### சிறு கைத்தொழில் தொழிலாளர் சங்கத் தலைவர்

மின்கட்டண உயர்வால் ஆடைவகைகள், ஊதுபத்தி, மீன் வகைகளைப் பதப்படுத்தி பாதுகாக்கப் பயன்படும் ஐஸ், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, பிளாஸ்ரிக், இரும்பு, காலணிகள், பைகள் போன்ற அனைத்தினதும் விலைகளை 5 முதல் 6 சதவீதம் வரை அதிகரிக்க வேண்டியிருக்கும் என சிறு கைத்தொழில் தொழிலாளர்கள் சங்கத் தலைவர் நிருக்ஷகுமார தெரிவித்தார். மின் கட்டண அதிகரிப்பானது உள்ளூர் தொழில்துறையில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனால் தோட்டத் தொழிலாளர்களும் மிகவும் ஆதரவற்ற நிலைக்கு உள்ளாவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். மின்சார சபையின் நிர்வாகத் திறமையின்மைக்கு மேற்படி தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களை காரணமாக்குவது நியாயமா? என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்ப விரும்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரெ-13)

# காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நாடு முழுவதும் 598 இறப்புகள் பதிவாகியுள்ளன

2021 ஆம் ஆண்டில், காசநோய் காரணமாக நாடு முழுவதும் 598 இறப்புகள் பதிவாகியுள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டை விட 2022 இல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,393 ஆக அதிகரித்துள்ளது என தேசிய காசநோய் மற்றும் காசநோய் கட்டுப்பாட்டு சமூக சுகாதார நிபுணர் ஹேமலி சேனாதிலக்க தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 26 பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலங்களில் 2021 இல் 6,778 பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளதாகவும், இது 2022 இல் 8,171 பேராக அதிகரித்துள்ளது என்றும் ஹேமலி சேனாதிலக்க குறிப்பிட்டுள்ளார். பதிவு செய்யப்பட்ட காச நோயாளர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில், கொழும்பு மாவட்டத்தில் 3,880 பேரும், கம்பஹாவில் 1,995 பேரும், களுத்துறையில் 1,034 பேரும் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, நாடு முழுவதிலும் பதிவாகியுள்ள காசநோயாளிகளின் எண்ணிக்கையில் 46 சதவீத மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்ச்சியான இருமல் நிலவினால், அதையிட்டு கூடிய கவனம் செலுத்தி, மாவட்ட மருத்துவமனையிலோ அல்லது அருகிலுள்ள அரச மருத்துவமனையிலோ மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் எனவும் சுகாதார நிபுணர் ஹேமலி சேனாதிலக்க மேலும் தெரிவித்தார். (ரெ-10)



# வன ஜீவராசிகளின் பாதுகாப்பிற்கான Wildlanka சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

## வனஜீவராசிகள் சஞ்சிகையும் வெளியீடு




வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் Wildlanka சர்வதேச ஆராய்ச்சி மாநாடு கடந்த 18 ஆம் 19 ஆம் திகதிகளில் கொழும்பு பத்தரமுல்லை 'வோட்டர்ஸ் எட்ஜ்' ஹோட்டலில் 'பாதுகாப்பிற்கான சுற்றுச்சூழல் அமைப்புகளை நிர்வகிப்போம்' என்ற தொனிப் பொருளில் நடைபெற்றது.

வனஜீவராசிகள் மற்றும் வனவள முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.சி. திருமதி.ஏ. ஹேரத் தலைமையில் வனஜீவராசிகள்துறை பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டாரவின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாட்டில் Wildlanka எனும் வனஜீவராசிகள் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இந்த சஞ்சிகை பல புதிய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தியுள்ளது. இம்மாநாட்டின் சிறப்புரையை விலங்கியல்துறை நிபுணர் ரொஹான் பெத்தியகொட நிகழ்த்தினார். இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், சுற்றாடல் ஆராய்ச்சி நிறுவனம், சுயாதீன ஆய்வாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகிய அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தன.

இந்நிகழ்வின்போது Wildlanka சஞ்சிகையினை கலாநிதி நிலந்தி டயஸ் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.எம். சி.ஹேரத் மற்றும் வனஜீவராசிகள்துறை பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார ஆகியோரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். (ரெ-14)




JRIDE
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
JRide - Beyond the Road
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# பாகிஸ்தானை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது

2023 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி தனது இரண்டாவது வெற்றியை நேற்றுப் பெற்றுக்கொண்டது.

நேற்று சென்னையில் நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தானை முதன்முறையாக ஆப்கானிஸ்தான் அணி வீழ்த்தியிருந்தது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணித்தலைவர் 74 பாபர் அசாம் ஓட்டங்களையும் அப்துல்லா ஷபீக் 58 ஓட்டங்களையும் ஷதாப் கான் மற்றும் இப்திகார் அஹமட் ஆகியோர் தலா 40 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணியின் நூர் அஹமட் 3 விக்கெட்களையும் நவீன் உல் ஹக் 2 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர்.

இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், 38 ஓவர்களை சுழல்பந்து வீச்சாளர்களே வீசியிருந்தனர். இது உலகக்கிண்ணத் தொடரில் ஓர் இன்னிங்ஸில் சுழல்பந்து வீச்சாளர்களால் அதிக ஓவர்கள் வீசப்பட்ட போட்டியாக இடம்பிடித்திருக்கிறது.

283 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 2 விக்கெட்களை மட்டுமே இழந்து 49 ஓவர்களில் இலக்கையடைந்து 8 விக்கெட்களால் வெற்றி பெற்றுக்கொண்டது.

ஆப்கானிஸ்தான் அணியின் இப்ராஹிம் சட்ரான் 87, ரஹ்மானுல்லா குர்பாஸ் 65 ஓட்டங்களையும், ரஹ்மத்



ஷா, ஹஸ்மதுல்லா சஹிடி இருவரும் ஆட்டமிழக்காது முறையே 77, 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இப்ராஹிம் சட்ரான் தெரிவானார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2023இல் வெளியிடப்பெற்றது.